931

ஜைன முனிவர் அருளிச் செய்த

திருப்பாமாலை.

931
A.21
30 NOV 1921

இஃது,

ஏட்டுப்பிரதிகளில் பலவாருக இருந்து

மேல்மின்னல்-சக்கரவர்த்தி நயினுரால்

சுத்தப்பிரதியாக எழுதப்பெற்று,

வேதாரண்யம்,

ஜவுளி வியாபாரம்-ம-ா-ா-ஸ்ரீ

சு. அப்பன் முதலியார் அவர்கள்

பொருளுதவியால்,

சென்னை:

தருமசீலன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

காப்பி ரைட்.

1921

Q3:417
N21
184429

ஜைன முனிவர் அருளிச் செய்த

திருப்பாமாலை.

இஃது,

ஏட்டுப்பிரதிகளில் பலவாறாக இருந்து

மேல்மின்னல்-சக்கரவர்த்தி நயினாரால்

சுத்தப்பிரதியாக எழுதப்பெற்று,

வேதாரண்யம்,

ஜவுளி வியாபாரம்-ம-ள-ள-ஸ்ரீ

சு. அய்யன் முதலியார் அவர்கள்

பொருளுதவியால்

சென்னை,

தருமசீலன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பெற்றது.

காப்பி ரைட்

1921

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
5	27	முக்கொடை	முக்குடை
9	29	முவா	மூவா
13	14	சாத்திச்	சாத்தி
15	17	பாவைப	பாவைப்
17	10	சிந்தி	ளந்தி
19	6	முலர்ந்தது	முலர்ந்ததும்
21	8	திரியா	தீரியா
22	31	மந்தரா	மந்தார
24	31	விருத்திலில்	விருத்தியில்
32	19	ணையேறித	ணையேறித்

முகவுரை.

திருப்பாமாலை என்னும் இந்நூல், பஞ்ச பரமேஷ்டிகளின்சிறப்புக்களையும் அவர்குணங்களையும்விரவி உண்ண உண்ண உவட்டா உயரிய செழுந்தமிழ்மொழியில் அருமையான ஆசிரியப்பாக்களால்தோத்திரச் செய்யுட்களாகப் பாடப்பெற்றது. இந்நூலில் சித்தபக்தி, சைத்தியபக்தி, பஞ்சகுருபக்தி, ஆருகதபக்தி, நந்தீசுவர பக்தி என்று வந்திருத்தல் போலவடமொழியிலுள்ள "கிரியா" என்னும் கிரந்தத்திலும் இவ்வாறே வந்திருக்கின்றன. ஆதலால் இந்நூலியற்றிய ஆசிரியர் மேற்கூறிய கிரியா என்ற நூலிலுள்ள கருத்துக்களைத் தழுவியே இதனைச் செந்தமிழ் மொழியில் எழுதியதாகத் தெரிகிறது. இந்நூலிலுள்ள சிலபாக்களை யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் ஆசிரியப்பா வினங்கட்கு இலக்கியமாகக் காட்டி யிருத்தலால் இது மிகத்தொன்மையுடைய தென்பது விளங்குகிறது.

இப்பாமாலையில் பஞ்சாஸ்திகாயம், உட்திரவியம், சப்ததத்துவம், நவபதார்த்தம், தசதர்மம் முதலிய தத்துவங்களின் தொகைகளும், பந்தகர்மங்களின் வகைகளும், சமவசரணம், லோகஸ்வரூபம், முதலிய அமைப்பின் விசேடங்களும், பஞ்சபரமேஷ்டிகளுக்குச் செய்யவேண்டிய அஷ்டவிதார்ச்சனையின் முறைகளும், பூஜாதிரவியவகைகளும், இருபத்து நான்கு தீர்த்தங்காரர்கள் மோக்ஷமெய்திய மாதம் திதி நக்ஷத்திரம் காலம் முதலிய விவரங்களும், தீபங்குடி, சனகாபுரி, சண்பைமாநகர், வைகைத்திருமலை, சித்தை. களந்தை, மயிலாபுரி, பெளிகுளம், சிநகிரி, வனகிரி, முனிகிரி, திருநறுங்கொண்டை முதலிய தல மூர்த்திகளைத் துதிக்கும் சிறப்புக்களும், சதுர்விம்சதிதீர்த்தங்காரர்களது வரிசைக்கிரமமும், அருகனாலய மடைவோரிருக்க வேண்டிய ஆசாரவகைகளும், இன்னும் பிறவும் அடங்கியிருத்தலால்; இதன் ஆசிரியர் ஜைனமததத்துவத்திலும் செந்தமிழ் வடமொழி ஆகிய இருபாஷையிலும் நல்ல புலமை வாய்ந்தவரெனத் தெரிகின்றது.

இத்தகைய மாண்புடைய இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் காலம். முதலியவை தெரியவில்லை. ஆயினும் இந்நூலின் காலத்தை மாத்திரம் ஒருவாறு துணிந்துரைக்கலாம். எங்ஙன மெனில், ய பருங்கல விருத்தியிலும், அதனை முதனூலாகக் கொண்டு

சாகரியற்றிய காரிகைக்குக் குணசாகரர் சகாப்தம் ௨00-௩00 அளவில் எழுதிய விருத்தி யுரையிலும் இந்நூலிலுள்ள சில பாக்கள் இலக்கியமாக எடுத்துக்காட்டப் பட்டிருத்தலால் இது இற்றைக்குச் சுமார்ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்திற்கு முந்திய தென்பது புலப்படுகின்றது.

இந்நூற் பாக்கள் ஏடெழுது வோரால்பெருகிவந்த பிழைகள் மிகவும் செறிந்து கிடந்தன; அவற்றை ஒருவாறு வேறு பிரதிகளின் உதவி கொண்டு திருத்தினேன்; எனினும் சில பாக்களில் பொருள் விளங்காது அமைந்துள்ள பதங்களைத் திருத்துவதற் கஞ்சி அவற்றை அவ்வாறே பதிப்பித் துள்ளேன். ஆதலின் வேறு பிரதியுள்ளவர்கள் இப்பதிப்பிற்காணும் பிழைகளை எனக்குத் தெரிவிப்பரேல்அவற்றை வந்தனத்துடன் ஏற்று மறுபதிப்பில் திருத்திக் கொள்வேன்.

இந்நூற் பாக்கள்தோத்திரப் பாக்களாக அமைந்திருத்தலால் சிராவக சிராவகிகள் ஜிநசைத்தி யாலயங்களிலும் பூஜாகாலங்களிலும் பாராயணஞ் செய்வதற்குமிகவும் பயன்படுமெனக் கருதி இதனை அச்சிடலாயினேன். இந்நூலை அச்சிட வேண்டிய செலவு பூராவையும் வேதாரணியம். ஜவுளி வியாபாரம். ஸ்ரீமான். சு. அய்யன் முதலியாரவர்கள் ஏற்றுக் கொண்டதற்கு அவருக்கு நன்றிசெலுத்த நான் மிகவுங்கடமைப் பட்டுள்ளேன்.

இந்நூலை அச்சிடுவதற்கு பிரதி நல்கினவர்கள். ஆரணி மளிகை ஸ்ரீமான்-வசுபால நயினர் குமாரர் வர்த்தமான நயினர் அவர்கள், திருப்பருத்திக் குன்றம் ஸ்ரீமான்- புருஷோத்தம உபாத்தியாயர் முதலியவர்களாவர்; இவர்கள் செய்த உதவி மறக்கற்பாலதன்று.

இந்நூல் முழுவதையும் ஒப்புநோக்கிப் பிழைகள் திருத்திச் செப்பஞ் செய்த எனது தமிழாசிரியர்- செம்பூர் வித்வான், ஸ்ரீமத்-வீ-ஆறுமுகஞ் சேர்வையார் அவர்களுக்கு என்னுடைய வந்தனத்தை நன்றியறிவுடன் சமர்ப்பிக் கின்றேன்.

இந்நூற் பதிப்பு முட்டின்றி முடிய அருளிய முக்குடையானது பொற்கழலைத் திரிகரண சுத்தியோடும் அநவரதமும் வாழ்த்துங்கடப்பாடுடையேன் யான்

இங்ஙனம்,

மேல்மின்னல்-சக்கரவர்த்தி.

ஸ்ரீ

திருப்பா மாலை.

ஆலோசனை பக்தி.

வாடாத் தாமரை மலர்மிசை யொதுங்கிய
சேடுபடு சிறப்பிற் செல்வநின் றிருந்தடி
வீடுபெறு புண்ணிய முடையோர்க் கல்லது
கூடா தேத்துதல் கொடுமைசெய் பல்லுயிர்
நீடுபல திரிதலு மனந்தங் காலமென
வீடுபெற் றுயர்ந்தோய் விதித்தனை யதனால்
தொன்மைசெய் தொடர்வினை துணிந்துடன் கெடுகென
நன்னெறி வழாமை நாண்மலர் தூவிப்
பன்னெடுங் கால மேத்துவன் வணங்குவன்
கட்டொடு வீடுநன் கறியே னாயினும்
பட்டினி பலநாட் செய்யே னாயினும்
அட்டமி யுவாவுட னோரே னாயினு
மட்டமு முருத்தமு நினைந்தே னாயினும்
தத்துவ மாதவர்ப் பழித்தே னாயினும்
உத்தம நன்னெறி நில்லே னாயினும்
விரதமுஞ் சீலமு மழிந்தே னாயினும்
குரவரை மறுதலை கொண்டே னாயினும்
மறுதலை மனத்துடன் வைத்தே னாயி
அறுவகை யுயிர்களை யோம்பே னா
இந்திய வசைவழித் தேன்றே
மந்திர பதங்களை மறந்தே
ன்றியி லுரைகளை நவின்
ற்றிசை கிரிகையை வ

கொலைபுரி கொடுவினை செய்தே னாயினும்
நிலமிசை நீசரோ டிசைந்தே னாயினும்
தானமொடு தவமிடை விட்டே னாயினும்
மானமு மாயமு மருவினே னாயினும்
பிழைத்தது குரவர்க் குரையே னாயினும்
உரைத்தது பேர்த்துநனி மீளே னாயினும்
வரம்பில் கொள்கையோ டொழுகினே னாயினும்
வரம்பி றீநெறி மருவினே னாயினும்
நூல்களை விநயஞ் செய்யே னாயினும்
நால்வகைச் சனனமே நயந்தே னாயினும்
காட்சியின் மறுதலை கண்டே னாயினும்
மாட்சியி னூல்களை மதித்தே னாயினும்
தூய்மையி னடைவகை யோதினே னாயினும்
*சூனை களுக்குடன் பட்டே னாயினும்
குத்தியுஞ் சமிதியும் செறியே னாயினும்
அத்தியைங் காயமுந் தெளியே னாயினும்
கறுநனி தீயன கண்டே னாயினும்
இறுதபொய் களவுடன் பட்டே னாயினும்
சேதிய மிடத்திட் டேகினே னாயினும்
சாதியல் லாரொடு சார்ந்தே னாயினும்
கோடும் புள்ளியு மெழுத்தும் பதமும்
…ழி மோசையும் பழித்தே னாயினும்
…லவுஞ் செய்தே னாயினும்
…ல்லா மகன்றுடன் கெடுகென
…வுட் பொலிந்துவீற் றிருந்து
…ய் நின்னடி யல்லது
…னை கெடுக்குஞ்
…றி தின்மையின்

…படும். அவை யாவன:—கள…
…சூனைகளுக்கு உடன் படு…

மனத்தினு மொழியினுங் காயந் தன்னினும்
நினைத்து வணங்கிநற் பூசனை செய்குவன்
வினைத்துக ளறுத்தியான் வீடுபெறற் பொருட்டே.

சித்த பக்தி.

காதி நான்மைக் கடும்பகை கருவறச்
சோதி *வெள்வாள் துணித்தபின் றெல்லைக்
கடையி னுன்மை யுடைமை யெய்தித்
†தண்ட கவாட பிதர பூரணைப்
பண்பினில் விரிந்து பரந்த யோகினிற்
‡கன லுண் டுமிழ்ந்த புனைதுகி லென்ன
நின்ற வகாதி பொன்றவு மாகி

---

*வெள்வாள்-சுக்கிலத்தியானமாகியவாள். வெள் என்பது வெண்மைநிறத்தை யுணர்த்தும் மையீறு கெட்ட பண்புப் பெயர். பரிசுத்தமன பொருள்களுக்கும் பரிசுத்தமான செய்கைகளுக்கும் எவ்வித களங்கமுமற்ற வெள்ளை நிறத்தையே உவமை கூறுதல் இயற்கை. ஆதலின் இங்கே வெண்மையானது உவமையாகுபெயராய்த் தன்னைப்போன்ற பரிசுத்தமுடைய சுக்கில,த்தியானத்தையுணர்த்திற்று; இந்த சுக்கிலத்தியானமே வாள் போன்று காதிக் கடும்பகை நான்கையும் துணிப்பதாதலின் இதனை வாள் என்றார் ஆசிரியர். இந்தச் சுக்லத்தியானத்தை வெள்வாளென்றும், வாலருவி யென்றும் வெண்மைக் கொப்பிட்டு உபயோகிப்பது ஜைன வழக்கு. வெள்வாளென்ற பிரயோகம் ஜைன நூல்களில் ஆங்காங்கே வரக்காணலாம். இனி, சுக்கிலத்தியானமாவது எல்லாக் கருமங்களும் நீங்கிய பரமான்மாவாகத் தன்னைப் பாவித்தல்; இதுபரமான்மபாவனை யென்று சொல்லப்படும். இதில் நான்கு வகையுண்டு; அவ்வகைகளை ஸ்ரீ புராணத்தில் இருபத்து நான்காவது தீர்த்தங்கராகிய ஸ்ரீ வர்த்தமானர் புராணத்தில் உணரலாம்.

† தண்டம்-தடி, கவாடம்-கதவு, பிதரம்-பிளத்தல் அல்லது கட்டுவிடல், தளர்ந்து விசாலித்தல், பூரணை-நிறைவு.

‡ கனலுண்டுமிழ்ந்த புனைதுகிலென்ன-இதை புனைதுகில் கனல் உண்டு உமிழ்ந்த என்ன என்று மாற்றிப் பொருள் உரைக்க வேண்டும். புனைதுகில்-ஈரம் புனைந்த (சேர்ந்த) வஸ்திரம். கனல் உண்டு-அக்கினியின் வெப்பத்தை
ற்று, உமிழ்ந்த என்ன-ஈரத்தை நீக்கியது போல (
ருப்பின் வெம்மையால் அவ்வீரத்தை விட்டு நீங்கி

நின்று மம்முத லந்நாற் குணனும்
மூன்றற் குணத்துடன் முறைமை யெய்தி
மருவிய பெருமை யருவியல் பாகி
மூவகை யுலகி னல்வகைத் தேவரு
முனிவரு மரசரு முதல்வரு மான
நனிபெருஞ் சிறப்பி னன்கினி தயா
நன்பொன் வானுல குச்சி நலந்திகழ்
வெண்பொன் வானகர் வீதியு ளெய்திக்
கைவல மடந்தை மெய்வலங் கவர்ந்த
மூவா முதல்வன் முத்தி நாயகன்
தாவா வின்பத் தகைமலர்ச் சேவடி
பூவும் புகையும் பொற்பமை விளக்கும்
மேவுஞ் சாந்தும் விளங்குதண் டுலமும்
சலமுஞ் சருவும் பலமும் பிறவும்
வளமலி யுவகையொடு வகைபெற வேந்தி
நாளு நாளும் வணங்குவன்
மீளா நற்கதி மேவுதற் பொருட்டே.

சைத்திய பக்தி.

ஒருமறு வின்றி யுலகமுழு துணர்ந்த
திருமறு மார்ப சிநவர சிநாலய
முயர்பெறு மந்தரத் தோங்கிய வெண்பது
வக்கரத் தொருநூறு சிகரத் தொருநான்
குத்தம சுவநிலத் தொருபது மிக்க
வெள்ளியம் பெருமலை யொருநூற் றெழுபது
வள்ளியங் குலமலை வகுத்தன முப்பது
குண்டல ருசகா குத்தரத் தின்மிசை
ஒண்டிறற் சேதிய மோரொரு நான்கே
ந்தீ சரத்தினே

ரேழு கோடிமிசை யெழுபத்தி ரண்டுநூ
றாயிர மாகு மதோலோ கத்தில
வயங்கிய வியந்தரர் சோதிட ரிடத்துப்
பயன்படு சுவர்க்கத்துப் பாங்கமை சேதிய
மெண்பத் தீரிரு நூறா யிரத்த
தொன்படு தொண்ணூற் றேழா யிரத்திரு
பத்துமூன் றேதிரு வொத்திலங் குவன
வாங்கவை யன்றி யமரரு மரசரு
மீங்க ணியற்றிய வெல்லையில் சேதியம்
பட்டகம் படிமம் பாடி வாரமொடு
திட்டமை தூபைகள் சேதிய மாமா
மாறணி சேதிகை யழகமை பெருங்கொடி
வீறிய பஞ்சகல் யாணமொடு பிறவும்
எனைத்துள பரமதீர்த் தங்களு மவற்றை
நினைத்த வுள்ளமொடு நித்தலும் வணங்குவன்
வினைத்துக ளறுத்தியான் வீடுபெறற் பொருட்டே.

பஞ்சகுருபக்தி.

ஒருபெருங் கேவலத் துலக மூன்றும்
பொருவற வுணர்ந்த புண்ணிய ராகிப்
பேரொளி மண்டிலம் பெரிதினிது விளங்க
வரிசுமந் தேந்திய வணியா சனத்துப்
பொங்கு சாமரை புடைநின் றிரட்ட
வெங்குந் துந்துமி யந்தரத் தியம்ப
மருவிய பூமழை வானோர் சொரிதர
எரிதளிர்ப் பிண்டி யின்னிழன் மேவி
யிலங்கொளி முக்கொடை யியல்பெற நிழற்றக்
கலங்கிய விருவினைக் கடிபடை யுடைய
புனைந்த நல்லொளிப் பொன்னெயின் மன்னிக்
கணமீ ராறுங் கைதொழு தேத்த
வெங்கட் டிவினை வெருவிநின் றகல

அங்க பூவ மருளிய வறிவரும்
எண்வகை வினைகளை யியல்கெட நூறி
உண்மையி னெண்குணத் துயர்ந்த சித்தரும்
இருவகைச் சுத்தியி னிறைந்த தன்மையி
னருமையி னைவகை யாசா ரத்துத்
திருந்திய வுள்ளமொடு பெருந்தகு பான்மை
யருந்தவப் பொருளா மாசா ரியரும்
பதினாற் பூவமும் பன்னிரண் டங்கமும்
பதினறு கேண்மையும் பாற்படு முறைமையி
னிதுவித னியல்பென வியம்பிய முனிவரும்
அருங்கல மும்மை யொருங்கு நிறைந்த
பெருந்தகு பான்மை யருந்தவத் தோருமென்
றறப்பெருங் குரவ ரணிமலர்ச் சேவடி
மும்மையி னிறைஞ்சி யிருவகை யிருக்கை
நால்வகை வணக்கத் தாறிரு சுழற்றி
நாலெட் டகற்றி வாலிதிற் பணிகுவன்
மேல்வரும் வல்வினை விரைந்துகெடற் பொருட்டே.

ஆருகதபக்தி.

* அங்கண் வானத் தமரரசரும்
வெங்களி யானை வேல் வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையரும்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கிவரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்

* இச்செய்யுளை, யாப்பருங்கலக்காரிகை யுடையார், "குன்றக் குறவன்" ...ட்டில் "அங்கண் வானத்துமே" எனக்குறித்து முதனிணைப்புணர்த் ...ப்பியல்-கூ.)

வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
அனந்தசதுட்டய மவையெய்த
நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
அந்தரதுந்துமி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந்,
தருநெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.

நந்தீசுவரதபக்தி.

—(o)—

மூவுல குக்கு முழுநடு வாகிய
நாவலந் தீவுக்கு நாலிரண் டாய
நந்தீ சுரத்தி னடுவுநின் றோங்கும்
அஞ்சன மலைக ணான்கே யவற்றினுள்
வாவிபதி னாறுள வடிவமைந் தியன்றன
காவில் ததிமுகந் தான்பதி னாறே
ததிமுக வாவிக டம்மாற் றிசைதொறும்
பதியமை காக்கள் பதினறு நான்கே
கீழ்த்திசைக் காவினுட் கிளரொளி யழகி
னேத்தரு மிரதிகர மெண்ணான் கெனப
பாற்பட மொழிந்த பருப்பதத் தின்மிசை
யேற்பன விருந்த வியற்கைச் சினாலயம்
ஐம்பத் திரண்டே யமரேந் திரர்க்குந்
தம்போற் புரத்தற் குரிய தமையும்
எண்ணருஞ் சினாலய மேத்தியெக் காலமும்

பண்ணருங் கார்த்திகை பங்குனி யாடியென
முன்னிய நாளின் முறைமுறை வழாமல்
தப்பில் கொள்கையர் தம்பரி வாரமொடு
மூவகை யுலகி னல்வகைத் தேவரும்
ஓவல ராகி யொன்றுபல் லாயிரம்
விகுர்வணை யுருவொடு தொகுவன தோன்றி
யகமலி யுவகையர் விரவினர் சென்றுசென்
றாடினர் பாடின ரார்த்தன ராடிக்
கூடின பல்லியங் குழலிசை முழவங்
காளமொடு சங்கு கடல்கிளர்ந் ததுவென
வாலிதி னொலிப்ப வாழ்த்தினர் வணங்கினர்
முப்பா லட்டமி யிடையிருட் போதிற்
றப்பா விதுப்பினர் தாமவை தொடங்கிப்
பொற்பா வுழைக்கலம் பொலியநன் கேந்தி
நற்பாற் சினாலய நான்குடன் புக்கு
கீழ்த்திசைச் * சோதமன் தென்றிசைச் சமரன்
மேற்றிசை யீசானன் வயிரோ சனனே
வடதிசைப் பக்கம் வலமா முறைமுறை
திடவதி னர்ச்சனை சீர்பெற வியற்றி
நாவரு காற்றிசை சேதியம் பூரணை
நாளோர் பதினெந் நாழிகை யளவா
நூனெறி வழாம னோக்கி முடித்தபி
னெண்ணு ளெல்லை யிம்முறை வழாமற்
கண்ணோர் விழாவிற் கழித்த பின்றை
பிறப்பறு காறுமெம் பெருமான் சினவரன்
சிறப்பெமக் காகெனத் திசைதொழு தேத்திக்
கூர்த்தெழு மூவகைக் குவலய மகிழப்
பாற்கட னறுநீ ராற்றின ராட்டி
மந்தர மலையை வலம்பட வந்து
தம்பதி புகுவர்க டேவர்க ளல்வரு

ன்-சௌதர்மேந்திரன்.

யப்படிக் காலத் தங்குள சினாலய
மிப்படிக் காலத்திங் குள்ளன போல
வார்வமீ தூர வணிகிளர்ந் தர்ச்சனை
நீரினுஞ் சாந்தினு நிறைந்ததண் டுலத்தினும்
பூவினும் புகையினும் பொற்பமை விளக்கினும்
அமுதினும் பலத்தினு மறிவன் றிருந்தடி
செவிகொள வர்ச்சித்துச் செயசெய வென்றெடுத்
தருகனை யறிவனை யதிசயத் தொருவனை
யுலகிடை யொருவனை யுயர்கதி தருவனைத்
தவநெறி முதல்வனைத் தாவாத் தலைவனைக்
கருவினை கெடுத்த கைவலச் செல்வனைப்
பரவுநன் னூனெறி வலமுற வந்து
மனத்தினு மொழியினுங் காயந் தன்னினும்
நினைத்தூ வணங்கிநற் பூசனை செய்குவன்
வினைத்துக ளறுத்தியான் வீடுபெறற் பொருட்டே.

பரகதி யகவல்.

பரகதி யளிக்கும் பாரிச நாதா
பஞ்சகல் யாண பகவபட் டாரகர்
செஞ்சுட ராகித் திமிர நீக்கிய
சிநவர தினகர திரியம்பக முனிவ
அருக சித்த வருளா சாரிய
வோதா துணர்ந்த வுபாத்தி யாய
சங்கர சாதுவ சதுரா னனத்த
கொங்கலர் பிண்டிக் கொற்றவ குணதர
கேவல ஜ்ஞான கிருபா சாகர
வனந்த ஜ்ஞான வனந்த வீரிய
வனந்த போக வனந்த தரிசன
மூவா முதல்வா தேவாதி தேவா

முக்குற் றத்தையு முனிந்தருள் தலைவா
ஞானா வாணிய நயவா வித்தகா
தேனார் தருநிழற் செல்வ சிநேஸ்வர
முத்தி வித்தகா சித்தி நாதா
தேவர் புரோகிதா திரைலோக்ய நாதா
பொன்னெயில் நாதா பூமிசை நடந்தவா
தென்னவ சூழத் தீர்த்த நாதா
வெண்குண நாதா விமையவர்க் கிறைவா
வந்தர நாயகா சுந்தர புனிதா
கரும மெட்டுங் கடிந்தருள் காரணா
வாருதி மேல்வரும் வானவ கேசவா
அறவாழி நாதா வரியா சனத்தா
வோரைஞ் ஞூறுவில் லோசனை யுயர்ந்தவா
பணிபண நீழற் பார்த்திப பண்ணவா
வியக்க ரேத்து மீச நாதா
வாரியா வமலா பேராசரியா
காமனை முனிந்தரு ளேம நாயகா
வாகம* நூறுநூ றுயிரந் தெரிந்தரு
ளேக நாதா மோக மிலாதவா
சத்திய வாசகா சாரணர்க் கதிபா
ஏத்தி யிறைஞ்சும் பத்தர்க் கெளியவா
வாரண பூரண சாரண காரணா
வாதி நாதா வேத நாயகா
வென்றிடு மன்னங்க ளாரியாங் கனைகளும்
வந்தினி திறைஞ்சி மலரடி யேத்தி
எழுபது சாரியும் வழுவா தோடிய
மணித்தே ரேற்றி மகர தோரண
மாநிழல் நிலத்தில் வளம்பெறவிருத்தி
மத்தளம் பேரிகை வார்புனை யிடக்கை

...ன்றும் பாடம்.

சித்திரச் சல்லிகை செழுங்குரற் பசுந்துடி
காடி முரசங் கைம்மணி தாள
முதிர்குர லடக்கங் குரல்புனை யுடுக்கை
கஞ்ச தாளங் கடும்பரிக் கிடுகு
நிசாளம்வெண் டமரக நெடுங்குரற் றவுணடை
சவளக் கிடுகு தண்ணுமை நெடும்பறை
யிழுகு பறையோ டிலங்குகைம் முரசந்
துய்யமல் லாரி தொல்புனை தவிசு
வொருகட் பறையுடன்
கைம்மணி பாலையாழ் கவின்படு குறிஞ்சி
மருத முல்லை வார்கட னெய்தல்
சுருதிக் காளந் தோலார் முழவஞ்
சங்கு வலம்புரி சலஞ்சலங் கொம்பு
கட்டச் சின்னங் காளந் தாரை
மன்னி முழங்க மறுகினி லியக்கிய
முக்குடை யுடனே முத்த வெண்குடை
மெழுகுவட் டத்துடன் வெள்ளை வட்டம்
பெருங்கா லசைவு
கொற்றக் குடையுடன் கொழுஞ்சேருடி
வெண்சாய் மரமுடன் செஞ்சாய் மரமுஞ்
சிராலோ வியலுந் திகழால வட்டமுஞ்
சேரச் சாத்தித் தெருவினி லியக்கிச்
செம்பொனா லயத்திற் றிகழ்பெற விருத்திச்
சிங்கா தனத்திற் செல்வனை யேற்றிக்
கன்னிக் கமலமு மங்கையி லாரமும்
பொன்னெயில் நீரும் பூம்பனி நீருஞ்
சந்தன வளறுங் குங்குமக் குழம்பு
மகிலுந் தேய்வையு மானகற் பூரமும்
பஞ்சகௌ வியமும் பசுஞ்சாந் துடனே
கழுநீர்க் கோட்டங் கடுஞ்சா திக்கா

யேலத் துடனே யிலவங் கத்தோ
டட்டி மருத மட்டவிழ் செண்பக
மெட்டு மரைத்தே பின்புறக் கரைத்துத்
துய்ய நீரா லையனை யாட்டி
வெண்டா மரையுஞ் செந்தா மரையுஞ்
செங்கழு நீருஞ் செண்பகப் பூவுஞ்
சிறு செண் பகமு
நறுமலர்க் குடச ஞாழல்வெள் ளாம்பல்
செம்பொற் சேலுந் திகழு மௌவல்
பைங்கொடி முல்லையும் பவழப் பூவும்
மல்லிகை மலரும் வாடாக் குறிஞ்சியுஞ்
சீரார் வெட்சியுஞ் சிவந்தபட் டிகையு
மேரார் பிச்சி யிலங்குசெவ் வந்தியு
மாதவி மலரு மத்தமுங் கடுக்கையு
மருவுங் கொழுந்து மணவிரு வேலியுங்
கன்றையு மாடலும் படர்வெண் டாளியுஞ்
சூதப் பூவுந் துய்யது தாளியுந்
துளவமும் பச்சையு மளவில் வர்க்கமுந்
தும்பையுங் குராவுந் தூய்மலர்ப் பிடவு
முள்ளுடைப் பிடவமும் வெள்ளிலைக் கைதையுங்
கன்னி காரமுங் காட்டங் கோலமும்
வன்னியு ஞாழலும் வஞ்சிப் பூவும்
அரும்பவிழ் புன்னையு நரந்தம் பூவும்
மடலவிழ் மெருகும் படலம் பூவும்
விடந்தரு மலரியும்
நந்தியா வட்டமும் நாண்மாலை யகத்தியுஞ்
செம்மந் தாரமும் வெண்மந் தாரமு
மகிழ்க்குன் றுத்தியு மாதளை மலருங்
காவளை மலருங் காஞ்சிப் பூவும்
...சி னிளமுலை போலுங்
...க் கரந்தையு மட்டவிழ் நெய்தலும்

காரிலைக் குருந்துங் காயா மலருங்
கான மல்லியுங் காட்டு முள்ளியுஞ்
செழுநீர் மலருஞ் செம்பீர் மலரு
மாம்பல் மலரு மகத்தியுங் குறிஞ்சியும்
நாளிகே ரத்தி னலந்தரு பாளையும்
பூகப் பாளையும் பொன்னிற வண்ணமுங்
கடம்ப மாலையுங் கடப்பம் பூவுங்
கொத்தலர் குளவியுங் குங்கும மலரு
மன்னவை வனமு மணவை வனமு
முச்சிமல் லிகையுஞ் சச்சைமென் னிஞ்சியுஞ்
சந்தனப் பூவுஞ் சாதிப் பூவும்
பொற்றா மரையுஞ் சொற்றபல் லவமும்
நொச்சியு மகிழு மெச்சச் சாத்திச்
சென்னெற் கதிருஞ் சிறந்தகற் பூரமுந்
துய்யதண் டுலமு மாரச் சாத்திச்
வீரனை வணங்கிப் போனகத் துடனே
பொலிந்திடுங் கருணையுங்
குளமுந் தயிருங் கோலச் சீனியுங்
கண்டுந் தளிகையிற் கருத்துறப் படைத்து
வட்டணைக் கோவில் வளம்பட வேற்றி
யத்தந் தன்னா லையனை யூட்டி
நன்னீ ரூட்டி நறுமென் புகையுந்
தூபமுங் காட்டித் துலங்கா லத்தியுஞ்
சீர்பெற வெடுத்துச் செழுங்காப் பிட்டு
மாதவ செயசெய வானவ செயசெய
சந்திர செயசெய சுந்தர செயசெய
வந்தினி திறைஞ்ச மனத்தவ செயசெய
புண்ணிய செயசெய புங்கவ செயசெய
பண்ணவ செயசெய பார்த்திப செயசெய
இக்கணை முனிந்தரு ளிறைவா செபசெய

துக்கங் காணாத் துறைவா செயசெய
நிரயங் கடந்த நிமலா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
அத்தா போற்றி அழகா போற்றி
சுத்தா போற்றி சுடரே போற்றி
முத்தி யளித்த முதல்வா போற்றி
மாசி லாத மணியே போற்றி
காதிக் கருமங் கடிந்தாய் போற்றி
யெல்லு மிரவு மானாய் போற்றி
வல்லவ ரேத்து மருந்தே போற்றி
சாந்தி நாதா சரணம் சரணம்
மாந்தளிர் மேனி மாயவா சரணம்
கோடா வறநெறிக் கோவே சரணம்
பீடார் விஞ்சைப் பிரானே சரணம்
பிறப்பிறப் பில்லாப் பினாக சரணஞ்
சிறப்புடை வேதச் சிவனே சரணம்
அணியணி யாத வழகா வபயம்
அண்டர் தேடிய வருளே யபயந்
தொண்டர்க் கெளிய சுடரே யபயம்
அய்யா நமஸ்தே அருகா நமஸ்தே
செய்யா நமஸ்தே சித்தா நமஸ்தே
ஆசா நமஸ்தே அமலா நமஸ்தே
ஈசா நமஸ்தே யிறைவா நமஸ்தே
கோவே நமஸ்தே குருவே நமஸ்தே
சிந்தா மணியே செல்வா நமஸ்தே
பாவ நாச பண்ணவ நமஸ்தே
என்றென் றேத்தி யிறைஞ்சி யிறைஞ்சிப்
பரகதி தன்னைப் பலகா லாக
நின்றா யிரமு மிருந்தா யிரமும்
...கழும் பேற நாதனை வாழ்த்தி
...ண்ண மெவ்வண்ண மிறைஞ்சிச்

திருப்பாமாலை.

செவ்வண்ண மாறு தீங்கினை யழித்துப்
பிறவா யாக்கைப்பெரியோ ராவர்
மறவா தருகலை வாழ்த்தினர் தாமே.

பஞ்சகலியாண அகவல்.

——(o)——

அருள்விரி தவத்தி னழகிய பாவனை
யொருபதி னாறி னுயர்பொன் னுலகம்
மருவி யந்தத் துவந்துமா நிலத்திற்
றரும சக்கரத் தலைவ னாக
அரசர் குலத்து ளவதரித் தருளுமுன்
னிருமுத் திங்க ளிமையோ ரிறைவர்
ஐஞ்சிறப் பயா அவதரித் தருளி
விஞ்சுறப் புவியின் விளங்க வுதித்த
கணத்தம ரேந்திரர் கரிமேற் கொடுபோய்த்
தணப்பறு முவகையிற் றமனிய வரைமேல்
அரியா சனத்தெழுந் தருளுவித் தஞ்சாம்
பரவைப பாலும் பலவா விகணதி
விரைநீ ராட்டி விழவிரண் டாவது
பரிவொடு செய்தபின் பண்புறு காலந்
திசையம ரேந்திரர் செழுமணிச் சிவிகை
மிசைகொடு போந்து விழவுமூன் றாவது
முதிர்வனத் தியற்ற முனிவ ராகி
மதிகொடு காதி வல்வினை துணித்து
மாக நிலையின் வந்த தறிந்து
தோகையர் தம்மொடு சுரருமிந் திரருந்
தூசொளி பரவத் துன்னிய பன்னிரண்
டோசனை யகனக ரொருகணத் தியற்றி
விருப்புற நான்காம் விழவு நடாத்திக்
கருத்துறப் பன்னிரு கணந்தொழு தேத்த

184429

எண்ணான் காயிர மியனா டெங்கும்
விண்ணா றிடையின் மீதெழுந் தருளித்
திருக்கிள ரறமுப தேசஞ் செய்து
பரித்தபி னிறுதியிற் பரிநிர் வாணம்
விதிப்படி யைந்தாம் விழவு நடாத்தித்
துதித்தம ரேந்திரர் தொழவிங் ககாதியுஞ்
சிதைத்து மாசித் திங்க ளபர
சதுர்த்தசி யபிசித் துதயகா லத்தின்
அகதி யடைந்தரு ளாதி நாயகர்
புகழ்பங் குனியிற் பூருவ பஞ்சமி
யமருங் கேட்டை யந்தி வேளையிற்
பஞ்சம கதியடைந் தருள்சந்திரப் பிரபர்
பஞ்சமி பொருந்திய பரணி யந்தியின்
மஞ்சணி சிவஞ்சேர் மல்லி நாயகர்
சிறுகிய சதுர்த்தி சித்திரை யந்தியிற்
பிறவி யறுத்த பதுமப் பிரபசிந
சந்தமி யனுஷ முதயச மயத்துச்
சித்தி பதத்திற் றிகழ்பா ரீசர்
துவாதசி திருவா திரையுத யத்துத்
தவாநிலை பெற்றத் தவமுனி சுவ்வதர்
சித்திரை வளர்பிறை சிறந்தபஞ்சமி
யுற்ற ரோகணி யுதயகா லத்துத்
தத்தி யகாதி யறுத்தரு ளசிதர்
சஷ்டி மான்றலை யந்தி சமயத்து
அஷ்ட வினைக ளகற்றிய சம்பவர்
திதிமகி ழேகா தசிமகத் தந்தியிற்
றுதிசிவ மிசைந்தருள் சுமதி நாயகர்
அபர சதுர்த்தசி ரேவதி யந்தியின்
அபவருக் கமடைந் தருளர நாயகர்
அமாவாசை ரேவதி யுதயத் தகதியு
[illegible]யார் பரவ வெழுந்தரு ளனந்தர்

புணர்வை காசி பூருவ முதற்றிதி
யணியுங் கார்த்திகை யந்தி வேளையிற்
குணமெட் டும்பெறு குந்து நாயகர்
சஷ்டி புனர்பூ சத்துத யத்தின்
அஷ்ட வினையபி னந்தன முதல்வர்
அல்கிய சதுர்த்தசி அசுவனி யுதயத்து
மல்கிய வெண்குண மலர்நமி நாதர்
ஆனி மாத மதிவளர் சதுர்த்தசி
யான பூசநா சிந்தி னகதித்
தான மடைந்தருள் தரும நாயகர்
சதுர்த்தசி யபரஞ் சார்பர ணியந்தி
சதுர்க்கதி கடந்த சாந்தி நாதர்
ஆடி மாத மதிவளர் சத்தமி
நாடிய சித்திரை நன்னா ளந்தி
நீடிய வீடுசேர் நேமி நாயகர்
சிறுகட் டமியுத் திரட்டாதி யந்தியிற்
குறுகிய பவமறு குணதர விமலர்
ஆவணி பூருவ மடைந்த சத்தமி
மேவிய விசாக முதய வேளையின்
வீறுறு சிவமான விரும்புபா ரிசுவர்
பூரணை யவிட்டம் புணர்நா ளந்தி
சீரணி சிவநெறி சேர்சிரே யாம்சர்
திங்கள் புரட்டா சியின்வள ரட்டமி
யங்கமா மூலநா ளந்திய காலப்
பொன்கொடி மணம்புணர் புஷ்ப தந்தர்
சதுர்த்தசி விசாக மந்தி சமயம்
மதித்திடு முத்திசேர் வாசு பூச்சியர்
அற்பசி வளர்சட் டமிபூ ராடம்
நற்பக லந்தியின் மன்னு காக்கதி
சிற்பர மடைந்த சீதள நாதர்
கார்த்திகை யபரங் கண்ட சதுர்த்தசி

யுய்த்த சுவாதி யுதயத் தகதிசேர்
வர்த்த மான வரத சிநவரர்
நித்தனின் ஞும நிராயுத னின்மலர்
உத்தம சுகத ருலகநா யகவென்
றித்திர மெண்மூ விறைவர் திருவடி
தண்புனல் சாந்தந் தண்டுல நறும்பூத்
திண்படு சருநற் றீப தூபம்
பலமுத லருச்சனை பலவும் புரிந்த
புலவர்போல் யானும் புனைந்துமூ வகையின்
வழுத்தி நாளும் வணங்குவன் வணங்குவன்
வழுத்தா வில்கதி மருவுதற் பொருட்டே.

துற்சொற்பன அகவல்.

நாலு காலமு நடந்தபி னிறுதிக்
காலமா மைந்தாங் காலத் ததனிற்
றோற்றப் பட்ட சுதகே வலிக
ளேற்றவை யைவர்க் கியற்கை நாமம்
நண்ணிய நந்தி நந்தி மித்திரர்
திண்ணிய வபரா சிதர்கோ வர்த்தனர்
படர்புகழ் பத்திர பாகுகே வலிகள்
கடையில் வீறிய காலத் துயர்ந்த
கொண்டநற் சந்திர குத்திமக ராசன்
கண்ட வுற்பனக் கனுப்பதி னாறும்
பண்ணுற் றபத்திர பாகுகே வலிக்கு
விண்ணப் பம்முனி வினவக் கூறினன்
வீறுள சுவப்பன விதமடை வாகச்
சுத்த விரவியத் தமயமுங்,
கற்பக விருக்கம் கவடு முறிந்ததும்
வைப்பியனும் விமானம் வந்து போந்ததும்

பன்னிரு தலையுள பாம்பு கண்டதும்
மன்னு மாமதி மண்டலம் பிளந்ததும்
இருளுறும் யானை யிரண்டு பொருந்ததும்
பரவிய மின்மினி பாரிற் கண்டதும்
நாடிய தடாக நடுவெலா முலர்ந்தது
நீடிய சுற்றில் நீர்நிற்கக் கண்டதும்
மிகையெழப் புவியிற் புகையெழக் கண்டதும்
அரியணை மீதில் நரியிருந் திட்டதும்
பைம்பொற் பாசனப் பாயசந் தன்னை
வன்புறச் சுவானம் வாயிடக் கண்டதும்
குஞ்சர மீதினிற் கோந்தி யிருந்ததும்
சஞ்சலக் கல்லிற் றாமரை பூத்ததும்
வேலைநீர் வேதிகை மிஞ்சிப் புரண்டதும்
காவிளங் கன்றிரு கனதேர் பூண்டதும்
கருதரி தாமிளங் கன்றின்மே லேறி
வருதுரை மன்னன் தன்னையே கண்டதும்
இப்படிக் கண்ட வெண்ணிரு சுவப்பனம்
முற்பட வுரைக்க முனிவரர் மொழிவாம்
பானுவத் தமனம் பரமா கமங் கெடும்
மோனையாங் கற்பக முறிந்து வீழ்ந்தது
க்ஷாத்திரி யர்க்குத் தயையுறச் செவிக்குச்
சேர்தவ முத்தி தீட்சையு மில்லை
வானில் விமானம் வந்து போந்தது
சோனையாஞ் சாரணர் தோற்றமு மில்லை
பன்னிரு தலையுள பாம்பு கண்டது
பன்னிரு வற்சரம் பதிக்கொளு மற்பம்
இந்துவின் மண்டல மிரண்டாய்ப் பிளந்தது
பந்து சனங்கள் பேதம் பிறக்கும்
நீலிரண் டியானை நீடிய யுத்தம்
கால காலங் கார்பொழி யாது
மின்மினிக் காண்டலால் மெய்ப்பர மாகமஞ்

செம்மையா யருளிச் செய்வரு மில்லை
நடுவுலந் துசுற்றில் நன்னீர் நின்றது
தடநடு வெங்குந் தன்மங் குன்றித்
தொகையிலாத் தன்மஞ் சுற்றில் நடக்கும்
புகையைக் காண்டலாற் பொல்லார் மிஞ்சுவர்
சிங்கா தனத்தில் நரிசேர்ந் திருத்தல்
வெங்கால நீசர்கள் மேதினி யாள்வர்
சொன்னபா சனப்பாற் சோறுநாய் தீண்டல்
சன்னமா மித்தியா தபசியர் தம்மைத்
திரைசெறி யுங்கடற் செகதலத் தலைவர்
அரசர்பூ சித்தே யாசாரஞ் செய்வர்
அத்திமேல் மந்தி யமர்ந்ததி ராச
புத்திரர் நீசரைப் போற்றிச்சே விப்பர்
கல்லினிற் கஞ்சம் பூக்கக் கண்டது
அல்லல் வேட்கை யனுசாரஞ் செய்வர்
நற்சமுத் திரங்கரை புரளக் கண்டது
உற்ற வாறினி லொன்றுகொள் மன்னர்
அஞ்சு பங்குகொண் டாறினி லுட்குறை
கொஞ்சமோர் பங்கு குடிக்கு நடத்துவர்
எலமுறுந் தேரி ரண்டுகன் றிழுத்தல்
பலகா லத்தவம் பண்ணும தொழிந்து
சென்ற மூப்பிற் செய்தவ மருவும்
கன்றின்மே லேறிய மன்னனைக் காண்டலால்
மித்தியா ஞான மிலேச்ச மாகி
மித்தியா தரிசனம் பிரபல மாகும்
என்றுமிக் காலத் திழிவெலாம் புயத்து
மன்றல் சேர்சந்திர குத்திமன் னவர்க்குப்
பதினாறு சுவப்பனம் பலன்பத்திர பாகு
சுதகே வலிகள் சொன்னநாட் டொடங்கி
மேவினி னடக்குங் காலவிச் சித்தியைச்
சாலவுந் தீகட்டறஞ் சார்வது கடனே.

சமவசரண வகவல்.

—(o)—

செஞ்சுட ரிலங்குந் திருமணிக் கோயிலை
யெஞ்சுத லின்றி யிருகையுங் கூப்பி
வஞ்சமும் பொய்யும் நீக்கிமன மகிழ்ந்து
விஞ்சுறப் புவியின் விளங்குமா லயத்தை
வலங்கொள வந்து மணித்தோ ரணத்துமுன்
னிலங்குபொற் பீடத் திரியா பதிபுரிந்
தஞ்சலி மிக்கசெய் தாங்கடி யெடுத்திட்
டஞ்சுடர்க் கபாட மணிபெற நீக்கித்
தொல்லைநம் பிறவித் தொடுகட லறுகென
வெல்லையி லுவகையோ டிறைஞ்சிமன மகிழ்ந்து
மணிநிலந் துடைத்து வாசனை நீர்தெளித்
தணிசெய்பொற் கலச மாங்கவை விளக்கி
யலகில் பெருங்குணத் தச்சுத னருள்செய்
துலகமுன் றுமறஞ் செய்தவுத் தமனைக்
கன்று கண்ட கறவைபோற் கசிந்து
சென்றுதொழு தேத்திச் சென்னிமேற் கொண்டு
மாசற விளக்கி மணிப்பீடத் திருத்திக்
காசறு பசும்பொன் கதிர்மணிக் குவட்டிடை
குலகிரி யதன்மேற் குளிர்மணிக் கயத்திடை
நிலவிய நீரொடு நித்திலந் தெளித்து
வெள்ளியம் பெருமலை மிருபளிக் கறைமிசை
நல்லொளி திகழும் நறுங்கடல் நீரும்
நாற்கடல் வளைத்த பாற்கடல் நீருங்
கோட்டமு மகிலுங் குங்குமக் குழம்புங்
கச்சோ லத்தொடு கமழிலா மிச்சமுங்
கன்றிகழ் வெண்ணெயுங் கமழ்கற் பூரமும்
என்றிவை முதலா மிருவெலி பிறவும்
இவைமுத லாகிய குழம்புகொண் டவைபெற

நவையறு சாந்தும் நன்குடன் கலந்து
நறுமழை பொழியநற் றுந்துபி கறங்கக்
குடையுங் கொடியுங் கோடி கொடியொடு
யிடையி னீண்டி யெழிலொளி திகழ்தர
வரசரு மமரரு மருந்தவக் குழாமுந்
தமரித மாகித் தாமுடன் பெருகிச்
சீர்சால் செம்மலர்த் தடக்கை கூப்பி
யாரா வுவகையோ டகமகிழ்ந் தேத்தி
இந்திரன் வழிபடு மிறைவன் றுளினை
யந்தமில் சிறப்பி னபிஷேகஞ் செய்து
தண்டா மரைமேல் நடந்தசத் துவனை
வண்டா ரசோகி னிழலமை வரதனை
முத்தணி முக்குடை மூவா முதல்வனைச்
சித்தனைத் தீர்த்தனைத் திருமறு மார்பனை
அத்தனை யாயிரத் தெண்குண நாதனைப்
பத்தியைச் செய்தவன் பாதத்து வணங்கி
வெண்டா மரையுஞ் செந்தா மரையுங்
காண்டார் மகிழுங் கழுநீர் மலரும்
நெய்தற் பூவொடு நீலோற் பலமுங்
கைதைப் பூவுங் கமழுஞ் செருந்தியுந்
திலதமும் நறவுஞ் செறியிதழ்ப் புன்னையும்
வெங்கைப் பூவொடு வெள்ளடம் பூவுங்
கோங்கம் பூவுங் கொன்றை மாலையும்
மகிழம் பூவும் மல்லிகை மாலையுந்
தாழம் பூவொடு தாதுமா தளையும்
ஞாழற் பூவொடு நந்தியா வட்டமும்
போதலர் குறிஞ்சியும் பொன்னு வாரையும்
பாடலர்ந் திலங்கிய பாடலம் பூவுந்
தோடலர்ந் திலங்கிய செறியிதழ் வெட்சியும்
மாதவி மலரொடு மந்தரா புஷ்பமு
மெல்லாப் பூவு மியல்பெறக் கொண்டு

கல்லா துணர்ந்த கருணா கரனை
யொருவனை யுலகி லுத்தமர் தலைவனை
யிருவினை நீக்கிய வீசனை யிறைவனை
மூப்பிறப் பில்லா மூவொளி மூர்த்தியை
நாற்கதி நீக்கியநவையறு நாதனை
பஞ்சகல் யாணனைப் பரம யோகியை
யாறிரு கணமுடை யருகப் பிரானை
யெழுவகை யறமு மெண்வகைப் பொருளு
மொன்பது பதார்த்தமும் பத்துவகை யறமும்
பழுதற மொழிந்த பவித்திரன் றன்னை
யணுவுரு வென்னு மாதி வேதனை
வரகதிக் கனைய வரகதி நாதனைப்
பொன்னரி மாலையும் பொற்பூ மாலையும்
மின்னொளி திகழும் விரிசுடர் மாலையும்
முற்பவ ழத்தொடு முத்துடன் மாலையுந்
தாளக் கோர்வையுந் தரமுடன் சாற்றிச்
சந்தனங் கொண்டு தகைபெற மெழுகிச்
செந்நெ லரிசி சீர்பெறப் பரப்பி
சுரும்பினம் வீசிய கரும்பின் கட்டியும்
வாழைப் பழமும் வருக்கையுஞ் சுளையுந்
தேமாங் கனியுஞ் செவ்விள நீருஞ்
சீர்பெற நாநா விதத்தாற் கூட்டிக்
காரகில் தூபங் கமழக் காட்டிக்
கதிரொளி நிறைந்தகற் பூர விளக்கு
மெதிரொன் றில்லா விரிசுடர் விளக்குந்
திகழு மாமணி விளக்குட னேந்தி
மிக்கசெஞ் சாலி வெண்போ னகமுந்
தக்கபா லாவி நற்போ னகமும்
அக்கா ரடலை யமுதுட னேந்திப்
பொற்பரி கலத்துப் பொலிவெய்தப் படைத்து

வெண்பா லிகையும் விளக்குமணிக் கவரியுங்
கண்பார் துவசமுங் கண்ணாடி நிலையும்
பட்டுந் துகிலும் பண்புடன் சேர்த்துச்
சங்கர சம்பவ சாந்தி நாதா
வங்கம் பயந்தவெம் மாதியை யர்ச்சிப்பன்
காட்சி யொழுக்கொடு ஞானந் தலைநின்று
மாட்சியி லெண்குண மாசற றூறி
மீட்சியி லெண்குண மேவுதற் பொருட்டே.

அருகசரண அகவல்.

திருமலர் மாதுஞ் செழும்புகழ் வனிதையு
மொருகலை மானும் பலகலை மடந்தையு
மென்றிவ ரனைவரு மொன்றினர் வழிபட
மண்முழு தாள்வதும் விண்முழு தாள்வது
மாதவம் புரிந்து மீதுல கடைவதும்
நின்னெறி யெய்தினர்க் கல்லது நிலமிசை
யெந்நெறி யெய்தினு மெய்தா தென்பதுன்
வாய்மொழி மறையிற் றூய்மையி லுணர்ந்தோய்
கூறிய வுரையிற் றேறின னதனால்
அன்றிமற் றுளதோ வென்னிடத் தூழ்வினை
யென்னு துயர்போ தென்னு துன்ன
தேழைய தடிமைக் கிரங்குதல் நின்கடன்
நின்னடி நீழலி னீங்கே னுதவின்
என்னறி வளவையி னெண்ணுதல் நின்கடன்
ஆதி பகவ னசோக வசலன்
சேதிப முதல்வன் சிநவரன் றியம்பகன்
சதுமுகன் மாதவ சங்கர புங்கவன்
முழுமதி நிகரில் முக்குடைச் செல்வன்

தவத்தவ முனிவன் பவப்பிணி மருந்து
துய்யவெண் சுடர்வா ளாயுத நிராயுதன்
செல்வக் கொழுநன் தேவர்கள் தேவன்
இருசுட ராழியி னெழுந்தருள் பொழுதின்
முறைபொறி மறையி னெறியுல களந்தனை
இருதமி யேனுக் கிருபத மீந்தனை
குற்ற மூன்றும் பற்றறக் கடிந்தனை
நாற்கதித் துயரம் மேற்கதி யடைந்தனை
ஐவகை யத்தியுஞ் செவ்விதிற் செப்பினை
அறுவகைக் காலமு முறுதியி லுரைத்தனை
எழுவகை நயமும் வழுவறத் தழுவினை
எண்பெரும் வினையு மிவையென வியம்பினை
ஒண்பொரு ளொன்பதும் பண்பற விரித்தனை
பத்து விரதமும் வித்தகர்க் கருளினை
மூவொளி வளப்பினை மூவதி சயத்தனை
மும்முறை மொழிந்தனை முதல்வனை நிச்சயித்
தெண்குணத் துயர்ந்தனை யெண்சிறப் புவந்தனை
காமனை யழித்தமுக் கண்ணா செயசெய
காலனை யழித்தமுக் காலா செயசெய
மறநெறி விளக்கிய மன்னா செயசெய
ஓரா யிரத்தெண் பேராய் செயசெய
சொல்லிய பெயர்குல மில்லாய் செயசெய
அணிவன தணியா தழகா செயசெய
பணிபண நிழல்வாழ் பரமா செயசெய
சுந்தர முடியுறை துறைவா செயசெய
அத்தா செயசெய வபயா செயசெய
நித்தா செயசெய நிமலா செயசெய
பூமிசை நடந்த புயலே சரணம்
தோமற நிமிர்ந்த சுடரே சரணம்
மாசில்பொற் றிருமறு மார்பா சரணம்
ஏசுதற் கொருமறு வில்லாய் சரணம்

பாயிர சமையப் பயங்கா சரணம்
ஐங்கலி யாணமுடை யபயங்கா சரணம்
பொங்கரி யாசன பூரணா சரணம்
ஈராறு குணமுடை யெந்தாய் சரணம்
ஓராறு வினைபல வென்றாய் சரணம்
ஐயா சரண மசோகா சரணம்
மெய்யா சரணம் விமலா சரணம்
பொன்னெயில் மேவிய புனிதா போற்றி
என்னையு மடிமையி லேற்றினை போற்றி
செருக்கு நாலு மறுத்தாய் போற்றி
விருப்பும் வெறுப்பும் வெறுத்தாய் போற்றி
பந்த மறுத்த பதத்தாய் போற்றி
அந்தமில் நான்மைக் கமைந்தாய் போற்றி
ஆதியு மந்தமு மற்றாய் போற்றி
சேதிய மிருவகை செறுவாய் போற்றி
ஆபத் துகளெழப் பணிபவர்க் கருள்புரி
தீபங் குடியுறை சிவனே போற்றி
சனகா புரியுறை யனகா போற்றி
சண்பை மாநகர் நண்பா போற்றி
மருமலர்க் குவளை வயலளி வைகைத்
திருமலை மேவிய சிவனே போற்றி
சித்தை மாநகர் நற்றவா போற்றி
[illegible]ந்திக ழார்ந்த வானவர் வணங்குங்
களந்தையிற் றிருவறங் கண்டாய் போற்றி
பயிலார் கலியொடு பல்லிய முழங்கும்
மயிலா புரியுறை மணியே போற்றி
சோதி வானவர் துதிசெய் தென்மன
மீதுறை வாய்பெளி குளத்தாய் போற்றி
சிங்கிரி வனகிரி சீர்திகழ் முனிகிரி
யெனவுயர் திருநறுங் கொண்டையி னடுவி
லொருதனி விளங்கிய வுத்தமா போற்றி

அப்பா போற்றி யருகா போற்றி
துப்பா போற்றி துணைவா போற்றி
யென்றுகொண் டிறைவன் றன்றிரு நாமம்
ஒன்றிய மனத்தி லுவந்துவந் தேத்தி
யாவருந் தொழுவதிவ் வுலகி னிலுயர்
தேவருந் தொழுவுயர் சித்திபெறற் பொருட்டே.

இருபத்து நான்கு தீர்த்தங்கரர்

அகவல்.

நிலவற கெழுந்த நீதியி னளித்த
அலகில் பெருங்குணத் தாதி யிடபன்
விசய வீர னசிதபட் டாரகன்
அம்பவழ மேனிச் சம்பவ நாதன்
அரத்தகு சேவடி யபினந் தனனும்
உரைத்தகு மேனி யுத்தம சீரன்
தொலையா வாய்மைச் சுமதிபட் டாரகன்
பாம மூர்த்தி பத்மப் பிரபனும்
ஏர்பெறு காட்சி சுபாரிச நாதன்
சந்திர வீரொளி சந்திரப் பிரபவன்
புரையறு தவத்து புஷ்ப தந்தனன்
சிங்க மேந்தணைச் சீதள நாதன்
திருமறு மார்பிற் றிகழ்சிரே யாம்சன்
மலர்மிசை நடந்த வாசுபூச் சியனும்
மேவல் மேனி விமலபட் டாரகன்
அருணெறி யளித்த வனந்த சித்தன்
தருமலை யுடைய தன்மபட் டாரகன்
தவநெறி யளித்த சாந்திபட் டாரகன்
கொந்தார் மலர்மழை குந்துபட் டாரகன்

அந்தர வினையி னரபட் டாரகன்
தொல்லை வினைகெடுத்த மல்லிபட் டாரகன்
முகடுபெற வுயர்ந்த முனிசு விரதன்
அரிட்ட நெறியின் நமிபட் டாரகன்
அட்டவினை கெடுத்த வரிட்ட நேமி
பட்ட வினைப்பகல் பாரிச நாதன்
சிட்டர்க ளேத்துஞ் சிறீவர்த்த மானன்
என்றிவை யோரிரு பத்துநால் வரையும்
நாளும் நாளும் நலம்புகழ்ந் தேத்த
மீளா வுலகம் வேண்டுதற் பொருட்டே.

ஈர்யாபத சுத்தி அகவல்.

அறிவகேண்மி னறிவ கேண்மின்
நெறிசெலு மிடத்து நின்மலர்ச் சயனம்
வறிதே படுக்கும் வாயுக் காயமு
முறைப்புணர்ந் தொடுங்கு மொழியும் வழியிற்
புறப்படு மிடமும் புகூஉ மிடமும்
உலைப்பெறும் வீதி யுலாவு மிடமும்
வீசிக் காயம் மேற்செலு மிடத்துங்
காசிறு மதுரக் காயக் கண்ணுங்
காய நீர்மலங் கான்றுமி ழிடமுஞ்
சீயென நாசிநீர் சிந்து மிடமுங்
கடுப்பொடு செற்றநீர் காட்டமிம் முதலா
யெடுப்பன வைப்பன வியலு மிடமும்
ஓரறிவுடையன வீரறி வுடையன
பாரறி மூவறி படைப்பனைம் பொறிக
ளுடையன பிறிதா யாமல மற்றை
வெட்டல் தகைத்தல் விழவே தள்ளல்

கொட்டல் கோறல் குறைத்தல் நிறைத்த
லொட்ட லடைத்த லுடைத்த லுரித்தல்
கட்ட லிசித்தல் கடுநோ யுறுத்த
லெடுக்கு மிடத்தினும் வைக்கு மிடத்தினும்
நடுக்குறப் பெயர்த்து நாட்டு மிடமும்
படருறு மதற்கே பாயச் சித்த
மிடர்கெடச் செய்பவ னெவனெனக் கேண்மி
னேயெலா நோய்செய்தார் மேலவர் மாதலி
யாய வதற்கே யனுகம்பை யாகிக்
கரத்தினு மெய்யினுங் காலினுந் தோளினு
முரித்த மனத்தி னுறும்வினை யிந்தனங்
கருத்துறு தியானக் காட்டழல் மாட்டுவ
னருகனைச் சித்தனை யாசா ரியனை
யுருகுமன்புட னுவாத்தியைச் சாதுவை
யொருகணங் கதுவா வுறூஉ வகையென
நடக்க வேண்டி னுகத்திடை நாடிக்
குடக்கொடு தெனாது குணக்கொடு விதிக்கு
வடக்கிவை தன்னு மலர்க்கை வீசிப்
படியிற் செலவழிப் பாதத் தாலே
யிடையா மனப்பதி யிகலியிந் தியங்களுந்
தெண்ணீர் மையவாஞ் சிறந்தவைம் பொறிகள்
மண்ணீர் தேயு வாயுவென் றிவற்றுற்
புண்ணீர் மையவாப் புலங்கெட வென்றால்
பண்ணப் பட்ட தாயினு மந்நோய்
பண்ணு விக்கவும் படூஉ மாயினு
மெண்ணப் பட்ட தாயினு முடன்பா
டேற்றதா யினும்வினை மாற்றுதற் பொருட்டே.

---

*ஒருபொருட்கிருதுணி புணைத்தனை யொருகா
லிருபிறப் பாளர்க்கு மூவமிழ் தாக்கி

* இது முதல்பின் வருவன வெல்லாம் யாப்பருங்கல விருத்தியில் உதாரணச் செய்யுட்களாக எடுக்கப் பட்டிருக் கின்றன.

யீரறம் பயந்த வோரரு ளாழியை
யிருமலர் நெடுங்க ணரிவையர் தம்மொடு
மூவகை யுலகி னால்வகைத் தேவரு
மும்மையி னிறைஞ்சு மீரடி யொருவனை
யிருவினை பிரித்து மூவெயின் முருக்கி
நாற்கதி தவிர்த்த வைங்கதித் தலைவ
நான்மறை யாள மும்மதிற் கிழவ
விருகுண மொருமையிற் றெரிவுறக் கிளந்த
விருசுடர் மருட்டு முக்குடைச் செல்வ
நால்வகை வருணமு மைவகைக் குலனு
மாற்றி மாந்தர்க் கறிவுற வகுத்தனை
யைந்நிற நறுமலர் முன்னுற வேந்தி
நாற்பெரும் படையொடு மும்முறை வலங்கொண்
டிருகையுங் கூப்பி யொருமையின் வணங்கி
யரசர் நெருக்குறாஉ முரசுமுழங்கு முற்றத்
திருநிதிப் பிறங்கலோ டிமையவர் சொரிதலின்
முருகயர் வுயிர்க்கு மும்மலர் மாரியை
நால்வகை யனந்தமு நயந்தனை தேவரி
லைவகை விழைவு மையற வெய்தினை
யாறுபுரி நிலையுந் தேறினர்க் கியம்பினை
யெழுநயம் விரித்த திருமறு மார்பினை
யறுபொரு ளறைந்தனை யைம்பத மருளினை
நான்குநின் முகமே மூன்றுநின் கண்ணே
யிரண்டுநின் கவரியொன் றுநின் னசோகே
யொருதன்மையை யிருதிறத்தினை
முக்குணத்தினை நால்வகையினை
யைம்பதத்தினை யறுபிறவியை
ஏழகற்றிய மாதவத்தினை
யரிமருவிய மணியணையினை
வளர்கதிரொளி மண்டலத்தினை
அதனால்,

மாகெழு நீழற் கேவலந் தோற்றிய
யாதியங் குரிசினிற் பரவுதும்
தீதறு சிவகதி சேர்கயா மெனவே.

ஒருதிரட் பிண்டிப் பொன்னெயின் மூன்றி
னீரறம் பயந்த நான்முக வண்ண
மூவகை யுலகிற்கு மொருபெருங் கடவு
ணால்வகை யோனியு ளிருவினை கடிந்து
முங்நெறி பயந்த செங்நெறி யொருவ
ணால்வகை யளவையு மிருவகைப் பண்பு
மொன்ற வுரைத்த முக்குடைச் செல்வ
னீரடி பரவின ரென்ப
பேரா * நன்னெறி பெறுகிற் போரே.

ஒருமன மாந்தர் மூவகை யுலகி
னிருமனம் பட்டு நாற்கதி யுழல்வோரே
இருமனம் பட்டு நாற்கதி யுழல்வோர்
ஒருமன மாகி மூன்றுதிரி விலரே
மூன்று திரிவறிந்து முதலொன் றறிந்தோர்
ஆன்ற நற்கதி யிரண்டன் வரவிலரே
யான்ற நற்கதி யிரண்டன் வரவுடையோர்
மேற்செயன் மூன்றி னென்றுணர்ந்

——(o)——

...கிய தண்பின்...
...விரி ச...

உலகுடன் விளக்கு மொளிகிள ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசன
மாசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண் மிசை யுலகே.

—(–)—

வேத முதல்வ வேதமி லகணித
தத்துவர் தலைவ முத்தி முதல்வ
வழுவா ஞானக் குழுவுடன் வந்து
துன்னுப் பாவ மன்னரை யவித்த
தரும நேமிப் பிரமனென வியந்து
துன்னின ராகி மின்னென மிளிர்ந்த
தகைமுடி சாய்த்துத் தத்துவர் வணங்குவ
வகைமுடி வல்வினை வாடுக வெனவே.

———

கொடி வாலன குருநிறத்தன குறுந்தாளன
வாலெயிற் றழலுளையன வள்ளுகிரன
ருத்தி னிணைபரிமா னணையேறித
றவுநெறிக் கிறைவனாகி
ருந் தெல்லார்க்கும
செப்பியோன்